## விலைக்கேள்விக்கான கோரல் (2021/02)

# மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,வடமாகாணம்

1. வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் சார்பாக மாகாண அமைச்சு மற்றும் திணைக்களப் பெறுகைக்குழுக்களின் (PMPC & DPC) தவிசாளர்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.

3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. SBD 1 ஆவணத்திற்கான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Bidding Data & Contract Data (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. SBD 2 ஆவணத்திற்கான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் Bidding Data (பகுதி 2) இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Contract Data (பகுதி 4) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **4.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

**6.** அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ,வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-222 0819, தொலைநகல் 021-222 0818) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி **மு.ப 10.30** மணிக்கு அல்லது **அதற்கு முன்னர்**
   - **(a) தவிசாளர்,மாகாண அமைச்சு பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ,வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் - (வகை 1 இற்கான)**
   - **(b) தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ,வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் - (வகை 2 இற்கான)**

   **எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

**8.** விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் **மு.ப 10.30** மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

<table>
<tr><td rowspan="3">வகை 01<br><br>PMPC வேலை</td><td colspan="4">கேள்வி ஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம்</td><td colspan="4">07.05.2021 முதல் 31.05.2021 வரை</td></tr>
<tr><td colspan="4">விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம்</td><td colspan="4">20.05.2021 அன்று மு.ப 10.30</td></tr>
<tr><td colspan="4">கேள்வி மூடுதல்/திறத்தல்</td><td colspan="4">01.06.2021 அன்று மு.ப 10.30</td></tr>
<tr><td rowspan="2">கேள்வி அடையாள இல</td><td rowspan="2">வேலை விபரம்</td><td rowspan="2">மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்)</td><td rowspan="2">ஒப்பந்த காலம்</td><td rowspan="2">தேவையான தரம்</td><td rowspan="2">மீளளிக்கப்படாத தொகை(ரூ)</td><td colspan="2">கேள்விப் பிணை விபரம்.</td></tr>
<tr><td>தொகை(ரூ)</td><td>தேவைப்படும் காலம்.</td></tr>
</table>

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| NP/B/KI/11(2021) | கிளிநொச்சி, முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு கட்டடத்துடன் ஆய்வுகூடம், கதிரியக்கவியல் மற்றும் நிர்வாகப்பிரிவு கட்டடங்கள் நிர்மாணித்தல் | 115.98 | 294 நாட்கள் | C4 or C3 (கட்டடங்கள்) | 25,000.00 | 1,160,000.00 | 27.09.2021 வரை |
| **வகை 02** | **கேள்வி ஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம்** | | | 07.05.2021 முதல் 31.05.2021 வரை | | | |
| | **விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம்** | | | 20.05.2021 **அன்று** மு.ப 10.30 | | | |
| **DPC வேலைகள்** | **கேள்வி மூடுதல்/திறத்தல்** | | | 01.06.2021 **அன்று** மு.ப 10.30 | | | |
| **கேள்வி அடையாள இல** | **வேலை விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்)** | **ஒப்பந்த காலம்** | **தேவையான தரம்** | **மீளளிக்கப்படாத தொகை(ரூ)** | **கேள்விப் பிணை விபரம்.** | |
| | | | | | | **தொகை(ரூ)** | **தேவைப்படும் காலம்.** |
| NP/B/KI/12(2021) | கிளிநொச்சி,பிராந்திய மருந்து விநியோக நிலைய கட்டடம் நிர்மாணித்தல் | 40.10 | 231 நாட்கள் | C5 or C4 (கட்டடங்கள்) | 10,000.00 | 401,000.00 | 27.09.2021 வரை |
| NP/B/KI/13(2021) | கிளிநொச்சி,கரைச்சியில் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கான இரண்டு மாடி அலுவலக கட்டடம் நிர்மாணித்தல் | 68.14 | 252 நாட்கள் | C4 or C3 (கட்டடங்கள்) | 15,000.00 | 682,000.00 | 27.09.2021 வரை |
| NP/B/KI/14(2021) | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இரண்டு மாடி களஞ்சிய கட்டடதொகுதி(பொது மற்றும் மருந்து) கட்டடம் நிர்மாணித்தல் | 83.50 | 266 நாட்கள் | C4 or C3 (கட்டடங்கள்) | 15,000.00 | 835,000.00 | 27.09.2021 வரை |
| NP/B/JA/22(2021) | தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகளுக்கான நான்கு மாடி விடுதி கட்டடம் நிர்மாணித்தல்.(நிலை 1) | 73.00 | 259 நாட்கள் | C4 or C3 (கட்டடங்கள்) | 15,000.00 | 730,000.00 | 27.09.2021 வரை |

**அனைத்து வேலைகளுக்கும் : இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பன பின்பற்றப்படும்.**

**கேள்வி அடையாள இல. NP/B/KI/12(2021) க்கு:** மேலே கூறப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக **"இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறு வரிகள் தவிர்ந்த) 50மில்லியனினுள் இருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொது நிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்".**

தவிசாளர்கள்
மாகாண அமைச்சு மற்றும் திணைக்களப் பெறுகைக்குழுக்கள்
மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்